# சித்தர்களின் அற்புத சித்துக்கள்

வெ. பிரபாவதி,
உதவிப் பேராசிரியை,
ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி, ஆழ்வார்குறிச்சி.

34

**ஆய்வுச் சுருக்கம்**

சித்தர்கள் மக்களின் நலனுக்காகவே தன்னை அர்ப்பணித்தவர்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அவர்கள் கண்டுபிடித்த பல வித்தைகளை நமக்கு கற்றுத்தந்தும் சென்றுள்ளார்கள் மனிதன் நோயின்றி வாழ்வதற்கும் பிணி மூப்பு இன்றி நெடுநாள் வாழ்வதற்கும் அஷ்டமா சித்திகளை கற்றுத் தந்தவர்கள் ரசவாதங்களை நமக்கு தந்தவர்கள் நவபாஷாணங்களை தந்தவர்கள் காயகல்ப முறையில் உடலை பக்குவப்படுத்துவது எப்படி என்பதை நம்மை அறியச் செய்தவர்கள் அவர்களின் சிறப்புகளை பற்றி இவ்வாறு கட்டுரையானது அமைக்கப்பட்டுள்ளது

**முன்னுரை:**

கடவுளைக் காண முயல் பவன் பக்தன் கண்டு தெளிந்தவன் சித்தன் என்கிறது தேவாரம். சித்தர் என்ற சொல் சித்து, என்னும் வடமொழிச் சொல்லிலிருந்து வந்ததாகும். இவர்கள் பல நெடுங்காலமாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்கள் எல்லா சமயத்திற்கும் அப்பாற்பட்டவர்கள் மனிதர்கள் பார்க்க முடியாததை பார்க்கின்ற செய்ய முடியாததை செய்கின்ற தெரியாததை உணர்த்துகின்ற அதீத சக்திகளை உடையவர்கள். இறைவனை இடைவிடாத தியானித்து தம் சித்தத்தை அடக்கி அக கண்களால் இறைவனை கண்டு உணர்ந்து தம் ஆத்ம சக்தியினால் செயற்கரிய செயல்களை செய்பவர்கள் சித்தர்கள் சித்தர்களின் அற்புத சித்துக்கள் என்ற தலைப்பில் கட்டுரையானது தொடர்கின்றது.

**சித்தர்களின் சிறப்பு:**

விஞ்ஞான முறையும் விஞ்ஞான ஆராய்ச்சியும் தமிழகத்துக்கு புதிதான அல்ல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் விஞ்ஞானிகள் பலர் வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்கள் வேறு யாரும் அல்ல சித்தர்கள் தான் மனித சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக வாழ்ந்தவர்கள் என்று கூட கூறலாம் தமிழ்நாட்டில் புலவர்களிலேயே பலருக்கும் சித்தர் நூல்களைப் பற்றி தெரியாது. பெரும்பாலான புலவர்கள் சொல்நயம் பொருந்திய பாடல்களையும், இலக்கியங்களையும், இலக்கணம் முறை படியுமே வாழ்ந்தவர்கள். ஆனால், சித்தர்கள் மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டதால் இவை அனைவராலும் அறியப்படாமலேயே இருந்து விட்டது. சித்தர்கள் சாகா நிலைகளை பெற்றவர்கள் அழியாத உடம்பை பெற்றவர்கள் உடம்பு அழிந்து போகாமல் பாதுகாக்கும் வழிகளை அறிந்தவர்கள் தம்முடைய உடம்பை அப்படியே வைத்துவிட்டு மற்றொரு உடம்பிலேயே புகுந்து நடமாடும் சக்தி படைத்தவர்கள் கூடுவிட்டு கூடுப்பாயும் வித்தை கற்றவர்கள் வானமார்க்கம் சென்றவர்கள்

சித்தர்கள் முக்காலங்களைப் பற்றியும் அறிவும் ஞானமும் பெற்றவர்கள் பலவிதமான அற்புதங்களை செய்யும் ஆற்றல் சித்தர்களுக்கு மட்டுமே உண்டு என்றால் அது மிகையல்ல உண்மை.

**அஷ்டமா சித்திகள்:**

சித்தர்கள் யோக மார்க்கத்தில் நின்று வெற்றி பெற்றவர்கள் சித்தர்கள் எட்டு வகையான சத்துகளை கற்றுத் தெரிந்தவர்கள் அனிமா, மகிமா, மஹிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், கரிமா என்பனவாகும்.

- அணுவைக் காட்டிலும் மிகவும் சிறிய உறவிலேயே உலா வரும் ஆற்றலுக்கு அனிமா என்று பெயர்.
- மழையினும் பெரிய உருப்பெற்று நிற்கும் ஆற்றலுக்கு மகிமா என்று பெயர்.
- உடம்பை கனமாக இல்லாமல் லேசாக செய்து கொள்ளும் நீரிலும் காற்று போல விரைந்து செல்லும் வல்லமை பெறுவது லஹிமா ஆகும்.
- தான் எதை விரும்பினாலும் எதை நினைத்தாலும் நினைத்தவையாக அடையும் வல்லமை பிராத்தி ஆகும்.
- தன் நினைப்பினை வல்லமையால் ஆற்றலாக எல்லாவற்றையும் படைக்கும் சக்தி பிராகாமியம் ஆகும்.
- எல்லோரும் தன்னை வணங்கும்படியான தெய்வத்தன்மையை அடைவது நீசத்துவம் என்று அறியப்படுகின்றது.
- உலகம் முழுவதும் தன் வசப்படுத்தி நடத்தும் ஆற்றலை அடைவதற்கு வசித்துவம் என்று பெயர்.
- ஐம்புலன்கள் நுகரும் இன்ப துன்பங்களை பற்றி கவலைப்படாமல் அவைகளுடன் சம்பந்தப்படாமல் இருப்பது கரிமா என்பது ஆகும்.

இவைகளை என் வகையில் சக்திகளாகும். இவற்றை அட்டமா சித்தி என்பர். இந்த எட்டு வகையான சக்திகளை பெற்றவர்களையே சித்தர்கள் என்பர்.

**ரசவாத வித்தை அறிந்த சித்தன்:**

ரசவாதம் என்றால் இரும்பு முதலிய உலோகங்களை தங்கம் வாங்குவது என்று நம்புகின்றனர். புராணங்களும் இதனையே கதைகளாக காட்டுகின்றன சித்தர்களின் நூல்களில் உலோகங்களை தங்குமாக்கும் முறைகளை சொல்லப்பட்டிருக்கின்றன செம்பு, இரும்பு முதலியவை மூலிகைச்சாறுடன் வேறு ஒப்புக்களுடன் சரக்குகளுடன் கலந்து புடம் வைத்து தங்கமாக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றன. அனைத்தும் செவி வழி செய்திகள் தான். ஒரு உலோகத்தை மற்றொரு உலோகமாக மாற்ற முடியாது ஆனால் ஒரு உலோகத்துடன் மற்றொரு உலோகத்தையோ பல உலோகங்களையோ கலந்து வேறொரு உலோகங்களை போல காட்டலாம் உண்மையை உணராதவர்களை செம்பை பொண்ணாக்குவதும் இரும்பை புண்ணாக்குவதும் இயற்கை தங்கமாக்குவதும் ரசவாத வித்தை என்று நம்புகின்றனர் சித்தர். நூல்களில் தேர்ந்தவர்கள் ரசவாதம் பாதம் என்பதற்கு வேறு பொருள் கூறுகின்றனர் வேதித்தல்

என்ற சொல்லே பாதம் என்று தெரிந்தது வேதித்தல் என்பதற்கு மாறுபடுவது என்று பொருள். வாதம் என்பதன் பொருள் மாறுபடுதல் என்பது ஆகும் ரசவாதம் என்பது ரசம் என்பது இயற்கை பொருட்களின் தன்மைகளை ஆராய்ந்து அறிதல் மருந்து வகையிலேயே ரசம் ஒரு முதன்மையான மருந்து என்பது வைத்தியம் தெரிவிக்கின்றார்கள் ரசப்பம் ரச செந்தூரம் ரசக்கட்டு முதலென ஒப்புயர்வற்ற மருந்துகள் ஆகும் பல நோய்களுக்கு தீராத பல கொடிய நோய்களுக்கு ரசம் சம்பந்தமான மருந்துக்கள் கொடுக்கப்படுகின்றன ஆகவே ரசவாதம் என்றால் ரசத்தின் மாறுதல்கள் அறிவது என்று பொருள். வாதம் பண்டங்களின் மாறுதல்களை காண்பது வைத்தியர்களுக்கு மருந்துகளின் குணங்களையும் மருத்துவத்திற்குப் பயன்படும் மூலப் பொருட்களின் குணங்களையும் தெரிந்திருக்க வேண்டும். அதனால் தான் வாத முறை பற்றி சித்தர்கள் நூல் கூறுகின்றன. வாத வித்தைகளை பற்றி வழங்கும் பழமொழிகளும் இது உண்மைகளை காட்டுகின்றன வாத வைத்தியம் வாதம் சுட்டு வைத்தியம் ஆனான் கெட்டால் வைத்தியம் என்ன பல பழமொழிகள் உண்டு.

**நவபாஷாண வித்தை அறிந்த சித்தர்கள்.:**

நவபாஷாணம் என்றாலே பழனியில் உள்ள தண்டாயுதபாணி என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று நவம் என்றால் 9 பாசனம் என்றால் விஷம் ஒன்பது வகையான விஷயங்களை கொண்டு செய்யப்படும் ஒரு அறிய வகையான மருந்து ஆகும் ஒன்பது வகையான விஷங்களை மற்றும் 4444 வகையான மூலிகைகளைக் கொண்டு உருவாக்கப்படக்கூடிய மருந்தை சிலையாக வடித்து சித்தர்கள் இறைவனாக வழிபட்டு அதன் மீது படியக்கூடிய அதன் மீது வரக்கூடிய நீரையும் அபிஷேகங்களையும் மருந்தாக பயன்படுத்தினார்கள் ஒன்பது வகையான விஷயங்கள் புடம் போடுதல் சுத்தி செய்தல் முறையில் தூய்மையை செய்து பல மூலிகைகள் அரிய வகையான தாவரங்களை மருந்தாக பயன்படுத்தி அரைத்து எம்புட்டு ஒரு சித்தர்கள் செய்ய 9 ஆண்டுகளில் முழு வெற்றியே போகர் செய்த பழனி தண்டாயுதபாணி சிலையாகும் ஒரு மனிதனை ஆட்சி செய்வது அவனுடைய கிரக நிலைகளாகும் செவ்வாயின் ஆதிக்கம் முழுமையும் நிறைந்த இடமாக பழனியை தேர்வு செய்து அதில் இந்த நவபாஷாண சிலையை பரிசை செய்த போகர் மக்களின் நலனை கருதியே இச்சிலையை பிரதிஷ்டை செய்தார் இசையில் இருந்து வரக்கூடிய நீர் மற்றும் நெஞ்சில் வைக்கப்பட்ட சந்தானம் இரவு முழுவதும் வைத்து பின் காலை கௌபீக தீர்த்தம் அனைவருக்கும் வழங்கப்படுகின்றது. இதனை 41 நாட்கள் தொடர்ந்து குடிக்க மனித உடம்பில் தீராத பல கொடிய நோய்கள் தீர்ந்ததாக இன்றும் நம்ப படுகின்றது போகர் நவபாஷாணங்களைக் கொண்டு பல சிலைகளை செய்துள்ளார் அவை கொடைக்கானலில் உள்ள நான் கோவில்களில் காணப்படுகின்றன முழுமையான வெற்றி பெறாத சிலை திருச்சியில் உள்ள பைரவர் சிலையாகும் ஆதிதிருவரங்கத்தில் உள்ள சிலை நவபாஷாண பூச்சியாகும் ஆங்காங்கே கோவில்களை கட்டி நவபாஷாணங்களைக் கொண்ட சிலைகளையும் பிரதிஷ்டை செய்கிற சித்த புருஷர்கள் மக்களின் நலனை கருதி நோயின்றி வாழவும் வழி செய்தார்கள் செவ்வாயின் ஆதிக்கம் பெற்ற பழனி தண்டாயுதபாணி சிலை முன் நாம் நிற்கும் போது செவ்வாயின் முழு கதிர்வீச்சை உள்வாங்கி தன் முன் வரக்கூடியவர்களுக்கு பிரதிபலிப்பதை இச்சிலையின் நோக்கமாகும் இச்சிலை முன் நிற்பவர்களுக்கு ஜாதகத்தால் ஏற்படக்கூடிய தோஷமும் நீங்கும் உடலில் நோய்கள் நீங்கி சுகமாக

வாழ சித்தர்கள் வழி செய்து உள்ளார்கள்.

**காயகல்ப மூலிகைகள்:**

மரணக்கணைகளுக்கு கேடயமாக நின்று சித்தர்கள் கண்டறிந்த பல மூலிகைகள் என்றும் இளையராது போர் முரசு கொட்டுகின்றன என்பது உண்மை. எந்த பயனும் இன்றி உயிர் காக்கும் நோக்கமும் இன்றி எந்த மூலிகையும் இங்கே முளைக்கவில்லை என்பதை சித்தர்கள் அறிந்து அம் மூலிகைகளின் துணையைக் கொண்டு காயகல்பங்களை மனித குலத்திற்கு காணிக்கையாக்கியிருக்கின்றனர்.

மனித சஷ்டியின் சிரஞ்சீவி கணவர்களுக்கு சித்தர்கள் கண்டிருந்த காயகல்ப மூலிகை ரகசியம் மிகப்பெரிய வாழ்வியல் கொடை என்று கூறினால் அது மிகையாகாது மனித தேகம் பாதுகாக்க அகத்தியர் தேரையர் போகர் புலிப்பாணி கருவூரார் என நெடிய சித்தர்கள் ஊர்வலம் காயகல்ப மூலிகை ரகசியங்களின் மர்மங்களை அம்பலப்படுத்தி உள்ளது. கல்ப தேகமும் காய சுத்தியும் பெறுதலும் கடை சரக்கு ஆக்கி விடாது ரகசியம் காத்து வந்த அந்த நிறம் மனித ஜீவிகளின் ஜனன மரண போராட்டங்களை தடுப்பதற்கு சித்தர்கள் மருத்துவ உபாயங்களை ஒருபோதும் ஒளித்தில்லை.

சரீரத்தை நரை திரை இன்றி நெடுநாள் உயிர் வாழ செய்யும் சித்தி காயசக்தி ஆகும் காயகல்ப மூலிகை சாற்றினை முறையாக உட்கொண்டால் மனிதர்களுக்கு மூப்பு இறப்பு எதுவும் வராது என்பார் சித்தர்கள்.

“உடம்பார் அழியும் உயிரார் அழிவர் கிரம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார் உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேனே உயிர் வளர்த்தேனே” என்பது திருமூலரின் வாக்கு. உடம்பைக் காப்பது கற்பம் இது உடலை கல்லை போல் ஆக்கும் கல்லினால் செய்த சிலை பண்ணிடும் காலமானாலும் நரை திரை மூப்பு பிணி எதுவும் வராதது போல் உடலுக்கும் வராது சித்தர்கள் வாழ்க்கைக்கு உகந்ததாக போகர் அனேக மூலிகை ரகசியம் அறிந்து காயகல்ப மூலிகைகளை செய்துள்ளார் போக முனிவரும் அவருடைய உண்மையுள்ள சீடரும் காயகல்ப குளிகையின் வேகம் தாங்காமல் முதலில் முயற்சித்து விழுந்தவர்கள் அந்த குளிகை உடலுக்குள் வேலை செய்ய ஆரம்பித்தவுடன் புதிய தெம்புடனும் ஆற்றலுடனும் நடக்க தொடங்கினார் என்பது போகரின் கருத்து ஆகும் சித்த மருத்துவத்தின் தந்தையான போக முனிவர்க்கே காயகல்ப முறையின் முழுமையான ரகசியம் தெரியும்.

**நிறைவுரை**

சித்தர்கள் மனிதனின் நலனுக்காகவே தன்னை அர்ப்பணித்தவர்கள் என்பதை நம்மால் அறிய முடிகின்றது. சித்தர்கள் எப்பொழுதும் வாழ்நாள் முழுவதும் மனிதர்கள் நோயின்றி வாழவும் ஆரோக்கியமாக வாழவும் தன்னால் முயன்றளவு இயற்கையை முறையிலேயே நோய் தீர்க்கும் மருந்துகளை கண்டுபிடித்தனர். உடல் ஆரோக்கியத்திற்கு மருந்து மட்டுமே நிரந்தரமான தீர்வு அல்ல உடல் பயிற்சியும் உண்டு அதன் மூலமும் பல வித்தைகளை கற்றுக் கொடுத்தவர்கள் சித்தர்கள். சித்தர்கள் இன்றும் பல இடங்களில் ஜீவ சமாதியாக உள்ளார்கள் சித்தர்கள் ஜீவசமாதி உள்ள இடங்களை நாம் தரிசித்து அவர்களின் அருளை முழுமையாக பெறுவோம்.

**மேற்கோள் நூல்கள்**


- சித்தர்களின் அற்புத சித்துக்கள்     உதயதீபன்     மீனாட்சி பதிப்பகம்
- போகர் 7000     S. சந்திரசேகர்     லியோ புக் பப்ளிஷர்ஸ்